1971 ஜூலை 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அல்ல பல்வேறு மாவட்டங்களில் இப்படிப்பட்ட குறவர் கூட்டத்தினர், 'கேப்மாரி' என்று சொல்லக்கூடிய கூட்டத்தினர் ஆகியவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இளையான்குடியைச் சேர்ந்த 25 பேர்கள் தஞ்சை, திருச்சி, கோவை, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 1964-ஆம் ஆண்டில் இருந்து பெண்களின் நகைகளை பறிப்பதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு பத்துப்பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 13 ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகள், சொத்துக்கள் மீட்கப்பட்டன. இதைப்போல பம்பு செட்டுகளைத் திருடுகிற கூட்டத்தினர் 9 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் இதுபற்றி மிகுந்த கண்காணிப்போடுதான் முயற்சிகளைச் செய்கின்றனர்.

திரு. பெ. மலைச்சாமி : பெண்கள் அணியக்கூடிய தாலியைப் போல சில ஆண்கள் புலிப்பல் கட்டி அணிவதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை எந்தக் குறவர்களும் பறித்ததாக செய்தி வரவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சில ஆண்டுகளுக்கு முன்பு குற்றப் பரம்பரையினருக்கு 'அவுட் ஆப் பவுண்டஸ்' என்று வைத்திருந்தார்கள். மீண்டும் அம்மாதிரி செய்ய ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ஆராய்ந்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசிலிக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்டவர்கள் தாலியைத் திருடக்கூடிய நிலையில் ஒரு புதிய முயற்சியில் பிங்கர் டிப்ஸ்—கைரேகைகள் பதிவு கூடக் கிடைக்காத நிலையில் செயல்படுகிறார்களே, எந்த இடத்தில் இவர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவ்வளவு விவரங்கள் தெரிந்திருக்கும் உறுப்பினர் அதையும் தெரிந்துகொண்டிருந்தால் நல்லது.

திரு. எம். தேவராசன் : தாலி பறிக்கும் கூட்டத்தினரின் செயல் முறையை விளக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் செயல் முறையை விளக்கத் தேவையில்லை. அது விளக்கப்படுவதும் நல்லதல்ல.

பல்லடத்தில் துணைக்கருவூலம்

*209 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் அருள்கூர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடத்தில் சப்டிரஷரி ஆபீஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் ஒன்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1971-72 நிதி ஆண்டின் திருத்திய வரவு-செலவு திட்டத்தில் பல்லடத்தில் துணைக் கருவூலம் ஒன்றை திறப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : அந்தப் பகுதி ஒரு வியாபார ஸ்தலமாக இருப்பதனாலும், அந்தப் பகுதியில் பஞ்சாயத்துயூனியன் சுல்தான்பேட்டை, பங்களூர் போன்ற இடங்களில் உள்ளவர்கள் அது மிகவும் தேவை என்று கருதுவதனாலும் அதை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதனால்தான் 1971-72-ஆம் நிதி ஆண்டிலேயே பல்லடத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

Demonstration by students of Annamalai University

* 210 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there was a students' demonstration in the Annamalai University about the 3rd February, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது பொறையூரில் நடைபெற்ற குடியுரிமை பயிற்சிக் கூடத்தில் ஒரு மாணவியிடம் ஒரு விரிவுரையாளர் தகாத முறையில் நடந்தார் என்ற குற்றத்திற்காக அவரை வேலை நீக்கம் செய்வது பற்றி போராட்டம் நடந்தது. பல்கலைக்கழக அதிகாரிகள் விரிவுரையாளரை பணியிலிருந்து நீக்கினர். பின்பு இந்த ஆணை ரத்து செய்யப்பட்டது.

Sandwich courses of study in Engineering

* 211 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to introduce Sandwich courses of study in the Engineering colleges in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இப்பயிற்சிப் பிரிவுகளை எந்த எந்த பாடங்களில், எந்த எந்த தொழில் நுட்ப நிறுவனங்களில் ஆரம்பிக்கலாம் என பரிசிலிக்க குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

நகராட்சி, மாநகராட்சித் தலைவர்கள் தேர்தல்

■ 212 வினா—திரு. கே. ஏ. வகாப் :
திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முனிசிபாலிடி, கார்பரேஷன் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் திட்டம் ஏதும் அரசிடம் உண்டா ?